செ.வெ.எண்.133 நாள்.01.03.2018.

**திருநெல்வேலி மாவட்டத்தில் 3 இலட்சம் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி போடும் பணிகள் இன்று முதல் 21.03.2018 வரை நடைபெறும் – அனைத்து கால்நடை வளர்ப்பவர்கள் தங்களது கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசிகளை தவறாது போட வேண்டும் – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தடுப்பூசி பணிகளை துவக்கி வைத்தார்.**

–––––––

திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியம், சேதுராயன்புதூர் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி பணிகள் துவக்க நிகழ்ச்சி இன்று (01.03.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி போடும் பணிகளை துவக்கி வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில், மேல்நிலைப்பள்ளி 2ம் ஆண்டு பொதுத் தேர்வு இன்று (01.03.2018) முதல் 06.04.2018 முடிய நடைபெறவுள்ளது. 123 தேர்வு மையங்களில் தேர்வுகள் நடைபெறுகிறது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை இக்னேஷியஸ் கான்வென்ட் பள்ளியில் +2 தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.03.2018) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி போடும் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இன்று 14வது சுற்று தடுப்பூசி போடும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 2,85,684 பசுக்களுக்கும், 17,998 எருமைகளுக்கும் என மொத்தம் 3,03,682 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது. இன்று முதல் மார்ச் 21ம் தேதி வரை கால்நடை மருத்துவர்கள் தலைமையில் 75 குழுக்கள் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படும். விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் தங்களது கிராமங்களுக்கு தடுப்பூசி போட கால்நடை பராமரிப்புத் துறையினர் வரும்போது, தவறாது 100 சதவிதம் கால்நடைகளுக்கும் தடுப்பூசிகள் போட்டு, நோய் தாக்கம் ஏற்படாமல், தங்களது கால்நடைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ) முனைவர்.ஜான்சன் ராஜேஸ்வர், கால்நடை உதவி இயக்குநர்கள் மரு.சங்கர்குமார், மரு.ஆறுமுக பெருமாள், மரு.அருணாசலக்கனி, மரு.குருசாமி, ஆவின் துணைப் பொதுமேலாளர் திரு.அருணகிரிநாதன் மற்றும் கால்நடை மருத்துவர்கள், கால்நடை மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.